[23rd March 1960

Sri P. U. SHANMUGAM : இதுவரை யாருக்காவது இதற்கென மானியம் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சில நூல் நிலையங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சாவூரில் இருக்கும் நூல் நிலையம், அடையாற்றில் இருக்கும் டாக்டர் சாமிநாத ஐயர் நூல் நிலையம் இவைகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

Sri K. ANBAZHAGAN : மிகப் பழங்காலத்திய இலக்கியங்கள் சிலவற்றை, எளிய விலையில் மக்களுக்குக் கிடைக்கும்படி அரசாங்கமே வெளியிட முன்வருமா ? திருக்குறள், சிலப்பதிகாரம் போன்றவைகளை அரசாங்கமே வெளியிடுமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : சிலப்பதிகாரத்தை சர்க்கார் தான் பிரசுரிக்க வேண்டுமென்பதில்லை. சில நூல்கள் இன்னும் பிரசுரிக்கப்படாமல் ஏடுகளிலேயே இருக்கின்றன. அவைகளை அச்சிட்டுப் பிரசுரிக்க முயற்சி நடந்து வருகிறது. அவைகளை வருடத்திற்கு மூன்று, நான்கு புத்தகங்கள் வீதம் அச்சிட்டு வெளியிட்டு வருகிறோம்.

Printing of Telegraph and M.O. forms in Tamil

* 532 *Q.*—Sri T. S. RAMASWAMI (on behalf of Sri K. SATTANATHA KARAYALAR) : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether this Government was asked by the Centre to print the Telegraph and M.O. forms in Tamil in our Government Press; and

(*b*) if so, whether this request was complied with?

The Hon. Sri M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri K. ANBAZHAGAN : மத்திய சர்க்கார் அமைச்சர் அவர்கள் அந்தந்த மாநில சர்க்கார் விரும்பினால் அவ்வாறு வெளியிட்டுக் கொள்ளலாம் என்று சொன்னதாகப் பத்திரிகைகளிலே வெளிவந்திருக்கிறது. அந்த விருப்பத்திற்கு, உரிமைக்கு இடம் இருக்கிறது என்று இந்த சர்க்கார் கருதுகிறதா ? செய்ய முற்படுமா ?

The Hon. Sri. M. BHAKTAVATSALAM : இந்தக் கேள்வி மத்திய அரசாங்கம் இந்த அரசாங்கத்தைத் தந்தி, மணியார்டர் பாரங்களை அச்சடிக்கும்படி கேட்டிருக்கிறதா என்பதாகும். அந்த மாதிரித் தகவல் இல்லை.

Sri A. GOVINDASAMY : மணியாடர் பாரத்தில் பணம் அனுப்புகிறவர் பெயரைப் பெறுபவர் இடத்திலும், பெறுபவர் பெயரை அனுப்பபுவர் இடத்திலும் எழுதக்கூடிய அசம்பாவிதங்கள் ஏற்படுவது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? இதைத் தவிர்க்க, தமிழ் பேசக்கூடிய பகுதிகளில் தமிழில் அச்சடித்த மணியார்டர் பாரத்தைக் கொடுக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தை வற்புறுத்துமா ?

The Hon Sri. M. BHAKTAVATSALAM : இம்மாதிரி அசம்பாவிதங்கள் ஏற்படுவது உண்டு. ஆனால் இப்போது இந்த இலாகாவை மத்திய அரசாங்கத்திலே கவனிக்கும் அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள். நமக்குச் தெரிந்தது அவர்களுக்கும் தெரியும். அவர் வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்.